**செய்தி வெளியீடு எண்: 02/2021** **நாள்: 17.12.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் இசை நிகழ்ச்சி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நாளை (18.12.2021) முதல் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதன் ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை” கலை குழுவுடன் இணைந்து நாளை 18.12.2021 (சனிக்கிழமை) மற்றும் 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) விம்கோ நகர் மெட்ரோ, வண்ணாரப்பேட்டை மெட்ரோ, உயர் நீதிமன்ற மெட்ரோ, எல்.ஐ.சி, ஆயிரம் விளக்கு மெட்ரோ, கிண்டி மெட்ரோ, விமான நிலையம் மெட்ரோ, திருமங்கலம் மெட்ரோ, கோயம்பேடு மெட்ரோ, வடபழனி மெட்ரோ, அசோக் நகர் மெட்ரோ, ஆலந்தூர் மெட்ரோ, மண்ணடி மெட்ரோ, சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையங்களில் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் (விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரை, விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரை, சென்ட்ரல் முதல் பரங்கிமலை மெட்ரோ வரை, பரங்கிமலை முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை) மெல்லிசை கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**